சுருக்கம்

சிலைஅமைத்தல்– திருச்சிராப்பள்ளி மாவட்டம் பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட 44வதுவார்டில் உள்ள திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான முக்கோணத்திடலில் பசும்பொன் தேவர் திருமகன் அவர்களின் முழுஉருவ வெண்கலச்சிலை அமைக்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசாணை (நிலை) எண். 3 நாள் 9 .1.2008

மீண்டும் படிக்க:

1. அரசாணை நிலை எண்.221, ந.நி.ம.கு.வ.(நநி5) துறை, நாள் 20.11.1999.

மேலும் படிக்க:

2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் கடிதம் எண்.ந. க 23/47178/2007 நாள் 10.10.2007.

----

ஆணை:

திருச்சிராப்பள்ளி மாவட்டம் பசும்பொன் தேவர் திருமகன் சிலை அமைப்புக் குழுவின் செயலர் தமது 3.10.2006 தேதியிட்ட விண்ணப்பத்தில் திருச்சி மாநகரில் சிறப்புக்குரிய தகுந்த இடத்தில் பசும்பொன் தேவர் திருமகனாரின் முழு உருவ வெண்கலச்சிலையை ஏழேகால் அடி உயரத்தில், வெண்கலத்தில் உருவாக்கப்பட்டு அமைப்பதற்கு அரசின் அனுமதி வேண்டியுள்ளார்.

2 பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட 44–வது வார்டு, திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் சாலையில் சங்கீத் ரெஸ்ட்டாரண்டுக்கு எதிர்புறம் உள்ள முக்கோணத்திடலில், பசும்பொன் தேவர் திருமகன் சிலையை வைப்பதற்கு அனுமதி வழங்குமாறு, பசும் பொன் தேவர் திருமகன் சிலை அமைப்புக் குழு செயலர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விண்ணப்பித்ததன் பேரில் அவரது கோரிக்கை மாமன்றத்தில் பரிசீலனைக்கு வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேற்படி சிலையை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அரசின் அனுமதி பெற்றுத் தரும்படி, மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

3.மேலும் அவர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட வார்டு ஏபி (AB) பிளாக் 35 நகர புல எண்.1–ல் திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் சாலையில் முக்கோண வடிவத்தில் நகர நிலப்பதிவேடுகளின்படி சர்க்கார் புறம்போக்கு ரோடு என உள்ளது என்றும், அதன் விஸ்தீரணம் ஹெக்டேர் 1.0540 சதுர மீட்டர் அல்லது 2 ஏக்கர் 60 செண்ட் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி இடத்தில் சிலை வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் 0.0094 ச.மீ அல்லது 1012 சதுர அடி ஆகும் என்றும், மேற்படி இடத்தில் சிலை வைத்தால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் சிலை அமைப்பு குழுவினரே சிலை நிறுவதற்கான செலவினையும் அதன் பராமரிப்பு செலவினையும் ஏற்றுக் கொள்வார்கள் என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும், மேலும் மாநகர காவல் ஆணையர் இச்சிலையை மேற்குறிப்பிட்ட இடத்தில் நிறுவுவதற்கு தனது ஒப்புதலைத் தெரிவித்துள்ளார் எனவும் மற்றும் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் மேற்படி இடம் மாநகராட்சிக்கு சொந்தமானது எனத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்டஆட்சித்தலைவர் இப்பொருள் குறித்து தமது தடையின்மை சான்று வழங்கி ஒப்புதலை தெரிவித்துக் கொள்வதாகவும், இதற்கான அரசாணையை வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட வார்டு ஏபி, பிளாக் 35, நகர புல எண் 1–ல் திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் சாலையில் சங்கீத் ரெஸ்டாரண்டுக்கு எதிர்புறம் உள்ள திருச்சி மாநகராட்சிக்கு சொந்தமான முக்கோணத்திடலில் பசும்பொன்தேவர் திருமகன் அவர்களது முழு உருவ வெண்கலச்சிலையினை ஓராண்டு காலத்திற்குள் நிறுவ, பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, சிலையினை நிறுவும் செலவு, பராமரிப்புச் செலவு மற்றும் பாதுகாப்பு பொறுப்பினை சிலை அமைப்பு குழுவினரே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், பசும்பொன் தேவர் சிலை நிறுவன அமைப்புக் குழுவின் செயலர் திரு.இரா.பாலகங்காதரன் என்பவருக்கு, மேற்படி இடத்தில், பசும்பொன் தேவர் திருமகன் அவர்களது முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்க, அனுமதி அளித்து அரசு இவண் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
திரு. இரா.பாலகங்காதரன், செயலர்,
பசும்பொன் தேவர்
திருமகன் சிலை அமைப்புக்குழு,
திருச்சி.

நகல்
ந.நி.ஆ, சென்னை – 5.
ஆணையாளர், திருச்சி மாநகராட்சி, திருச்சி.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் (I)ன் தனிச்செயலர்,
சென்னை–9.
மாண்புமிகு உ (ம) ஊ.வ.துறை அமைச்சரின் நே.உ,
சென்னை–9.
ந.நி.ம.கு.வ.(அந2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்